Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானியஹு கார்த்திகைமீ கஉ (27-11-38) { இல. 7

## என்ன செய்வது

சமீபத்தில் நடந்த சிரேஷ்ட தராதலப் பரீக்ஷையில் பெருந்தொகைப் பிள்ளைகள் சித்தியெய்தியிருக்கின்றனர். இவர்கள் என்ன செய்வது? ஆசிரிய தராதலப் பரீக்ஷை இருந்தால் அவர்கள் அதற்குரிய ஆயத்தஞ் செய்வார்கள். வித்தியாபகுதியார் அப்பரீக்ஷையையும் நிற்பாட்டி விட்டனர். பிள்ளைகள் தங்கள் கல்வியினலாகிய பயனைப் பெறமுடியாது முட்டுப்படுகின்றனர். உயர்தரக் கல்வி கற்க விரும்புவோரும் அக்கல்வியைப் பெற முடியாதிருக்கின்றனர். சில பிள்ளைகள் ஆசிரிய கல்லூரிகளில் இடம் பெறலாம். பெரும்பாலோர் வேலையின்றித் திரியவேண்டியவர்களாகின்றனர். கல்விகற்றுக் கொள்ளக் கூடிய வயதில் பிள்ளைகளை அலையவிடுவது முறையன்று; ஆசிரிய தராதலப் பரீக்ஷை அல்லது அதற்குச் சமமான ஓர் பரீக்ஷை நடாத்துவது அவசியமாகும். உயர்தரக்கல்வி கற்றற்குரிய வசதிகளை ஏற்படுத்துவது அரசினர் கடமையாகும்.

நமது நாட்டுக் கல்வி முறை புஸ்தகப்படிப்பை மாத்திரம் விருத்திபண்ணுவதால் தொழிற்பயிற்சியடையும் பாக்கியத்தை நம்நாட்டுப் பிள்ளைகள் பெறாது இருக்கின்றனர். பள்ளிக்கூடத்தில் தொழிற்கல்வி கற்றிருப்பின் அக் கல்வி பள்ளிக்கூடத்தை விட்டபின்னர் உறுதுணையா விருக்கும். ஆகையால் ஒவ்வொரு பிள்ளையும் தொழிலோடு சம்பந்தப்பட்ட கல்வியைக் கற்றல் அவசியமாகும். ஒவ்வொரு பகுதியிலுமுள்ள கைத்தொழிலை ஒட்டியே கல்வியைக் கற்பிக்க வேண்டுமென்று மகாத்மா காந்தியும் வற்புறுத்தியிருக்கின்றார். இக்கல்வி முறையை இந்தியாவின் பலபாகங்களிலும் கையாள முயல்கின்றனர். வித்தியாபகுதியார், இக்கல்வித்திட்டத்தையாவது இதுபோன்ற வேறொருதிட்டத்தையாவது பின்பற்றி நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏன் ஒழிக்கக்கூடாது.

தற்காலத்தில் இரண்டுநேரப் பள்ளிக்கூடங்களிற் படிக்கும் பிள்ளைகள் பெற்றோருடைய தொழில்களிற் சம்பந்தப்படாமலிருப்பதனால் அவர்கள் பள்ளிக்கூடங்களை விட்டபின்னர் தமது குலத்தொழிலைத் தானுஞ் செய்யுஞ் சக்தியற்றவர்களாக விருக்கின்றனர். வித்தியாபகுதியார் எல்லாப் பள்ளிக்கூடங்களும் ஒருநேரப் பள்ளிக்கூடங்களாக விருக்கவேண்டுமென்ற நியதியை உண்டாக்க வேண்டும். ஒவ்வொருதினமும் எட்டுமணி தொடக்கம் பன்னிரண்டு மணிவரையிற் கல்வி கற்றல் போதுமானது. பன்னிரண்டு மணிக்குப் பிற்பட்ட நேரத்தில் பிள்ளைகள் தொழிலிற் பயிற்சி பெறலாம். இம்முறை திருவாங்கூரில் கையாளப்பட்டு வருகிறது.

இலங்கையின் அரசியலும் மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. அதற்கேற்ப கல்விமுறையும் மாற்றமடைதல் அவசியமாகும். நாட்டு முன்னேற்றத்துக்குரிய கல்வி முறையை அரசினர் நாட்ட முன்வருவார்களாக.

பரிசுக் கதை

# இரவலன் செய்த கைம்மாறு

[* நா. கார்த்திகேசு—172]

ஆசிரியர் என்னும் பட்டம் எமது குலசேகரம்பிள்ளையிடம் தெரியாமல் வந்து சேர்ந்துவிட்டது. அவரை எம்மூரினர் 'வாத்தியார்' என்று கூறுவர். வாத்தியார் என்றால் சிறுபிள்ளையின் அழுகை கூட மாயமாக மறையும். அவர் கோபரூபி. அவர் கோப வெறி முழுதும் என்னைப்போன்றவர் அவருக்கீயும் ஒரு துண்டு புகையிலையுடன் மாறும்; இவ்வுபாயம் எமது வகுப்பினரில் மிகச் சிலருக்கே விளங்கும் சூடைகளிற் புகையிலை இல்லாவிடினும் வாத்தியாரின் வாயுள் அது அற்றுப் போவதில்லை. பிரம்பு கையிலெடுத்தவுடன் பாடசாலை அமர்க்களமாகிவிடும். பாடசாலை விடுமுறை நாட்களில் வீட்டப்பியாசங்களைச் செய்விப்பதில் அவர் கைதேர்ந்த பேர்வழி. சில நாட்களில் வீட்டப்பியாசங்களை எங்கள் பார்வையிலவர் விடுவதுண்டு. அவ்வேளைகளில் மாணவர் அப்பியாசங்களிற் பிழைவிடுவதேயில்லை. அது கண்டதும் வாத்தியார் பையன்களின் முதுகில் தட்டாதுவிடுவதில்லை.

ஒருநாள் (ஞாயிற்றுக்கிழமை) ஒரு வியாசமெழுதும் வேலையை ஆரம்பித்தேன். அன்றுகாலை உணவு முடிந்ததும் வேண்டிய ஆயத்தங்களுடன் வீட்டறையில் கதிரையில் உட்கார்ந்தேன். மூளை சுழன்றது. என் தாயார் மத்தியானச் சாப்பாட்டை அவ்வறையிற் கொணர்ந்து மூடிவைத்த செய்தியும் என் கவனத்துக்கு வரவில்லை. அவ்வளவு வேலையிற் கவனம். ஒரு சொல்லாவது எழுதவில்லை. இந்த நிலையில் 6-ந் தரம் படிக்கிறேன்.

அன்று பிற்பகல் ஒரு மணியாகிறது. இவ்விஷயத்தைத் எழுதும்படிசொன்ன ஆசிரியர் மேல் என் வாய் வசை "(இல்லை புகழ்மாலை பாடிற்று. இடையிடையே பற்கள் நற, நறவெனக் கடிபடும் ஒலி, ஆசிரியர் மேலே வந்த கோபம் கண்களினின்றும் முத்துக்களைக் கொப்பியில் வீழ்த்தியது. இதற்கிடையே நறுக்கென ஒரு சிறுசத்தம் மேசையிலிருந்து கிளம்பியது. கையும் பேனைத்தடியை மேசையிற் போட்டது. கையினுட்புறத்தைப் பார்த்தேன், செவ்விரத்தம் வழிந்தது. இதற்கிடையிற் பேனை யலகு முரிந்திருப்பதை நோக்கினேன். என் தாயாரால் புதிதாக வாங்கித்தந்த அலகின் கூர் கையுள் பத்திரமாக ஒளித்துக்கொண்டது ஆவென மெதுவாகக் கூறியபடி கையைக் கொப்பியில் வைத்துவிட்டேன். கொப்பியின் தாள் இரத்தமயமாயது. நடந்த சங்கதியை வெளிவிடாமல் கிணற்றண்டை போய்க் கையலம்பிவிட்டு வந்து கொப்பியை மூடி வைத்துவிட்டுப் படிப்பிற் கவனஞ் செலுத்துவாரைப்போல இலக்கியப் புத்தகத்தை எடுத்து இடக்கையிலேந்தியபடி வாயசைத்தேன். கையின் வலி ஒருபுறம். தலைவலி இன்னொருபுறம். பசி, தாகம் எல்லாவற்றையுமடக்கிக்கொண்டு ஆசிரிய தண்டனைக்குப் பயந்தும் பேனை முறிந்த தன்மையையும் நினைத்து வருந்தினேன். வருந்தியழுவதாற் பயனென்னவென்று நினைத்தபடி, எழுந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டே என் தாயார் யாது செய்கிறார் என்பதைக் கவனித்தேன். அவர் அடுத்தவீட்டுக்குப் போன தன்மையை யான் ஒருவாறு அறிந்தேன். மத்தியானச் சாப்பாடு மூடப்பட்டபடியே இருந்தது. யான் தெருவோரமாகவுள்ள எமது வீட்டு விறாந்தையில் உலாவியபடி நின்றேன். சிறிது நேரஞ் சென்றதும் என்னுடன் படிக்கும் கோவிந்தன் என்னைக் கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்து உலாவப் போக வரும்படி கையைப் பிடித்து இழுத்தான். நான் அவனை இடைமறித்து வியாசமெழுதியாய்விட்டதா என்பதை அறிய விரும்பினேன்.

கோவிந்தன்: அதெல்லாம் நாளைக்குப் பாடசாலையிற் கவனிக்கலாம்.

நான்: அங்கு வியாசம் எழுத நேரம் வராதே?

கோ: வியாசம் எழுதாவிட்டால் என்ன?

நான்: ஆசிரியர் தண்டிப்பார்.

கோ: அவர் தண்டனை செய்யாதபடி செய்கிறேன்.

நான்: எப்படி, என்று கேட்டதற்கிடையில் என்னைக் கையிற்பிடியுடன் தெருவுக்கழைத்துச் சென்றான்.

இருவரும் கையிற் பிடித்தபடி எமதுவீட்டின் மேற்குப்புறத்திலுள்ள தெருவழியே சென்று, சந்திக்கருகிலுள்ள ஆலமர நிழலையடைந்து, அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டுமிருந்தோம். கைவலி பொறுக்கமுடியவில்லை. அதன்பின் வெட்கத்தைப் போக்கிவிட்டு எனது வியாசத்திறமையாலேற்பட்ட பலனை அவனிடங் கூறியபடி கையைக் காட்டினேன். அது கண்டு அவன் மிக வருத்தப்பட்டான்.

அப்போது ஒரு பிச்சைக்காரன் கையொன்றிலேந்திய கலசத்துடன் எங்கள் முன் காட்சி தந்தான். அவன் தோற்றம் இரக்கமில்லாத கோவிந்தனுக்கே பெரிய அநுதாபத்தைக்கொடுத்தபோது என் மனம் எவ்வாறாகும்.?

மெலிந்த சரீரம். வலக்கையில் கோல். ஆயாசம், பசி, தாகம் என்பவற்றால் நொந்திருந்தான். தம்பிமாரே! என்று மெதுவாகக் கூறியபடி உட்கார முயற்சிப்பதற்கிடையில் தடாலென விழுந்தான். கலசம் மாரூபமாயது. மூர்ச்சித்தான். மூர்ச்சை தெளிவிக்க விசிறுவதைவிட வேறொன்றுஞ் செய்யமுடியவில்லை. கோவிந்தன் வாயாலூதியும் தன் சிறிய சால்வையால் விசிறியும் களைப்பை நீக்க முயற்சித்தான். இதற்கிடையில் யான் வீட்டுக்கோடிச்சென்று, மூடியிருந்த உணவுடன் நீரையும் செம்பிற்கொண்டுவந்தேன். நீரில் சிறிது எடுத்து முகத்திற் றெளித்தேன். கண்ணை விழித்துக்கொண்டே நாவைமெதுவாக நீட்டினான் பிச்சைக்காரன். யான் நீரைப் பருக்கினேன். 15 நிமிஷமளவிற் சென்றவுடன் ஒரு பெருமூச்சுடன் எழுந்து உட்கார்ந்தான் அவன். ஆலிலையிலாக்

* ஓர் புத்தகம் பரிசாக வழங்கப்படுகிறது.

கப்பட்ட கலத்தில் சாதம் பரிமாறி உண்பித்தேன். நீரை மீண்டும் குடித்தான். என் பசி, தாகம் என்பன பறந்தன. பிச்சைக்காரனும் யானும் புதிய உற்சாகத்துடன் விளங்கினோம். எங்கள் பேரில் வாழ்த்துரையீந்தான் அவன். யான் அவனது கலசமுடைந்து அரிசி சிதறிப்போனமைக்கு வருந்தினேன். அவன் அதற்கு வருந்தாமல் தன் முடிச்சுக்களை அவிழ்த்து ஆராய்ந்தான். ஒரு நீண்டமுடிச்சை அவிழ்த்துக் காகித உறையுள்ளிருந்த ஒரு பொருளை நீட்டினான். அது காரமாக மணத்தது. சிறிது குறும்புத்தனம் பூண்ட கோவிந்தன் அதை வாங்கினான். யானோ அப்பொருளைத் திருப்பிக் கொடுக்கும்படி கோவிந்தனை வற்புறுத்தினேன். கோவிந்தனோ கொடுப்பவன். பிச்சைக்காரன், தான் பாட்டுப்பாடி ஒரு கடையிற் பெற்ற அப்பொருளை எம்மிடமே ஒப்பித்து அது பெற்ற வரலாற்றைக் கூறி இதைப் பெற்றோரிடம் கொண்டுபோய்க் கொடுக்குமாறு கூறிப் போனான். அது என்ன பொருள் என்பதை அறிய ஆவல்கொள்ளாது யான் வீட்டை அடைந்தேன். பொருளைக் கோவிந்தன் கொண்டுசென்றான்.

மறுநாள் (திங்கள்) காலை ஒன்பது மணி. பாடசாலைக்கும் ஆசிரியர் அன்று நேரத்துடன் போயிருந்தார். அவ்வேளையில் யான் சென்றேன். வியாசக் கொப்பிகளைக் கொண்டுவந்து மேசையில் வைக்கும்படி கட்டளைபிறந்தது. என் வகுப்பு மாணவர் 8 பேரும் போட்டி போட்டுக்கொண்டே கொப்பிகளை வைத்தோம். எனது கொப்பி ஆறாவது கொப்பியாகவும் கோவிந்தனின் கொப்பி ஏழாவது கொப்பியாகவும் அடுக்கப்பட்டது.

கொப்பிகளை ஆசிரியர் பார்வையிடுமுன் மேசையைத் திறந்து பிரம்பை எடுத்து மேசையில் எழுந்தருளச் செய்தார். நெஞ்சம் படபடவென அடித்தது. என் கண்கள் கலங்கின. அடுக்கின் மேலிருந்த கொப்பியை எடுத்துக்கொண்டே இது யாருடைய கொப்பி என்றார். என் கொப்பி சார் எனக்கூறியபடி எழுந்தான் கேசவன். கோவிந்தன் என்னை நோக்கினான். யானும் அவனைப் பார்த்தேன்.

எடுத்தகொப்பியை மீளவைத்துவிட்டு மேசையைத் திறந்து ஏதோ தடவினார் ஆசிரியர். புகையிலைக் காம்புகளை எடுத்து வீசினார். இதற்கிடையிற் கோவிந்தன் பயமின்றி அருகிற் சென்று உறையுளிருந்து வெளியே எடுத்த புகையிலைகளை நீட்டினான். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கண் சிமிட்டினோம். பல்லைக்காட்டியபடி புகையிலைகளை வாங்கி மோந்து பார்த்து அவற்றில் ஒரு சிறு துண்டை நறுக்கி வாயுள் வைத்துக்கொண்டே கொப்பிகளைக் கோவிந்தனிடம் பார்வையிடும்படி நீட்டிக் கொடுத்தார் ஏதோ சரியாகப் பார்த்தவன் போல எல்லோரும் சரியாக எழுதியிருப்பதாக அறிவித்தான் அவன். நல்லது என்றார் ஆசிரியர். உண்மையாக கோவிந்தன் வியாசமெழுதவில்லை. என் இரகசியம் முன்னரே வெளியாகியிருக்கலாம். எப்படி இரவலன் செய்த கைம்மாறு என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

# குள்ள நரி

“வ. இ.”

அடுத்த வீட்டு அருணாசலம்பிள்ளைக்கு மூன்று பையன்கள். மூன்றுபேரும் பலே குறும்புக்காரர். மற்ற அயல் வீட்டுப்பிள்ளைகள் அவர்களை ‘குறும்புக்குட்டிகள்’ என்று அழைப்பது வழக்கம்.

ஒருநாள் அருணாசலம்பிள்ளை கோவிலுக்கு அர்ச்சனைக்குக் கொண்டுபோவதற்காகச் சில வாழைப்பழங்கள் வாங்கி வந்திருந்தார். அவற்றை அவர் அலுமாரியில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்யச் சென்றதை இளைய பையன் இராமன் கண்டுவிட்டான். அருணாசலம் கிணற்றடிக்குச் சென்றிருந்த சமயம் பார்த்து அலுமாரியில் இருந்த பழங்கள் முழுவதையும் ஒரு கை பார்த்துவிட்டான்.

அருணாசலம்பிள்ளை வாழைப்பழத்தைத் தேடியபொழுது பழம் இருந்த இடத்தில் பழத்தோல்தானிருந்தது. உடனேயே, தனது பிள்ளைகளில் யாரோதான் பழத்தைச் சாப்பிட்டிருக்கிறார்கள், என்று அவர் தீர்மானித்துக்கொண்டார். மூவரில் யார் திருடியிருக்கலாமென்பதையறிவதற்காக அவர்களை அழைத்தார். அவர்களை முன்னர் உட்காரச் செய்து, “குழந்தைகளே, நான் அலுமாரியில் வைத்த பழத்தை யாரோ தின்றுவிட்டீர்கள். எனக்கு யார் சாப்பிட்டதென்பதும் தெரியும். நான் யாரென்று சொல்லவில்லை. தின்றவன் உண்மையைச் சொல்லவேண்டும். உண்மை சொல்வதுதான் பிள்ளைக்கு அழகு” என்றார். அவர்களில் ஒருவனாவது திருடினதாகக் கூறவில்லை. “வாழைப்பழம் எங்கேயிருந்ததென்பதும் எனக்குத் தெரியாது” என்றான் இராமன். “அதோ தின்றவனுடைய வாயில் சிறிது பழம் ஒட்டிக்கொண்டிருக்கிறதே” என்றார் அருணாசலம். உடனே இராமன் தனது வேட்டித் தலைப்பால் வாயைத் துடைத்துக்கொண்டான். இதைக் கண்டு மற்ற மூவரும் ‘கொல்’லென்று சிரித்தனர்.

இப்பொழுது இராமனை ‘குறும்புக்குட்டி’ யென்று ஒருவரும் அழைப்பதில்லை. அதற்குப் பதில் ‘குள்ள நரி’ என்றழைக்கின்றனர்.

# எலியின் கதை

அத்தியாயம் 7.

## ஒரு விருந்து

நான் அந்தமிருகக் காட்சிச் சாலையில் சில வாரங்கள் தங்கினேன். அதனால் எனது இனத்தவருட் பலரை யறியலானேன். சுவாத்தியம் குளிரத்தொடங்கவே அந்த ஜெர்மனிய எலி சோம்பத் தொடங்கிவிட்டது. இராப்பகலாக நித்திரை செய்துகொண்டே யிருந்தது.

நான் அந்தத் தோட்டத்திலே இன்னும் சிலநாட்டங்கியிருப்பேன். ஆனல், காவற்காரர்கள் எல்லோரும் எலிகளைப்பிடிக்க எத்தனம் பண்ணுவதை யறிந்தேன். அவர்கள் கைகளிலகப்படுவதைப் பாக்கிலும், மெல்ல வீட்டுக்குப் போவதே யுசிதமென்று நினைத்தேன். எனவே, கன்னமீசையனையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டேன்.

நாங்கள் நிலத்துக்குக் கீழாகவே சென்றேம். இடைவழியிற் கன்னமீசையன் தனக்குப் பசியெடுத்துவிட்டது என்று சொல்லிற்று. எனக்கும் பசியெடுத்துவிட்டது. "நாங்கள் ஏதாவதொரு வீட்டுக்குப் போகவேண்டும். இந்த முடக்காற்றிரும்புவோம், இது ஒரு வீட்டுக்குத்தான் போகவேண்டும்," என்றது கன்னமீசையன். அந்தவழியே நாங்கள் போனேம். கன்னமீசையன் வழக்கம்போல் முந்திச் சென்றது. ஆனல் நாங்கள் சிறிது தூரம் சென்றதும் இரண்டு பெரிய மண்டை எலிகள் எம்மைச் சந்தித்தன. "இந்தப் பாதை ஏதாவதொரு வீட்டுக்குச் செல்கிறதா," என்று கன்னமீசையன் அவற்றைக் கேட்டது. "ஆம் அப்படியே. ஆனல் இந்தப் பாதையும், அந்த வீடும் எங்களுக்குச் சொந்தமானவை. நாங்கள் ஒருவரையும் அங்குபோக விடுவதில்லை", என்று அவ்வெலிகள் கூறின.

பின்பு கன்னமீசையனின் பரிவான பேச்சின்பின் நாங்கள் அங்கு செல்வதற்குச் சம்மதித்தன. அந்த எலிகள் எங்களைக் கூட்டிக்கொண்டுபோய், ஒரு பெரிய அடுக்களையிற்கொண்டுபோய்விட்டன. அந்த இடம் மிகவும் நிம்மதியாயிருந்தது. மனக்கூட்டின் சத்தம் ஒன்றுதான் அங்கு கேட்டது. அடுப்பிலே சில கொள்ளிக்கட்டைகள் மினுங்கிக்கொண்டிருந்தன. அந்த வெளிச்சத்தில் நாங்கள் உலாவத்தக்கதாயிருந்தது.

நாங்கள் அங்குமிங்கும் பார்த்தோம். மணந்தும் பார்த்தோம். ஒரு சாடி எங்கள் மனத்தையும் மணத்தையும் மிகவும் அதிகமாக ஈர்த்தது. அது நன்றக மூடப்பட்டிருந்தது. எங்கள் கூரிய பற்களின் கெட்டித்தனமும் அந்தச் சாடியிற் பலிக்கவில்லை. ஒருவிதமாகச் சாடியின் மூடியை யெடுத்துவிட்டோம். தலையைச் சாடிக்குள் விட்டுப் பார்த்தோம். தலை போகமுடியவில்லை. சாடியின் வாய் அவ்வளவு சிறியதாயிருந்தது. கன்னமீசையன் தனது வாலைச் சாடிக்குள்ளேவிட்டுப் பின் வெளியே யெடுத்து உதறிவிட்டது. எண்ணெய்த்துளிகள். நானும் மற்ற இரண்டு எலிகளும் எண்ணெய்த்துளிகளை நக்கி நக்கியுண்டு மகிழ்ந்தோம். கன்னமீசையனை வியந்தோம். புகழ்ந்தோம்.

பின்பு கன்னமீசையன் அந்தச் சாடியிருந்த தட்டின்மீது ஏறி, அந்தச் சாடியை மெல்ல மெல்ல இழுத்து விழுத்தியுடைத்துவிட்டது. சாடியுடைந்த சத்தம் வெகுபலமாகக் கேட்டது. நாங்கள் சந்தோஷத்தினற் கூத்தாடினேம். அந்தச் சாடிக்குள் முந்திரிகைப் பழவற்றல்கள் இருந்தன. நாங்கள் ஆநந்தத்துடன் சாப்பிட ஆரம்பித்தோம். எலிகளுக்குச் சாப்பிடுவதென்றல் அதைவிட்ட ஆநந்தம் வேறில்லை. எலிகள் போசனப் பிரியமுடையன என்பதை யறியாத ஆரோ ஒருவர் பிழையாகப் "பிராமண போஜனப் பிரியா"; என்று கூறிவிட்டார்கள்.

நாங்கள் விலாப்புடைக்க உண்டுகொண்டிருக்கும் சமயம், அடுக்களையின் கதவடியில் சத்தங் கேட்டது. அது ஒரு மனிதனின் சத்தம் போல இருந்தது. நடுக்கங்கொண்ட ஒரு கை கதவை மெதுவாகத் திறந்தது. இன்னெரு தாழ்ந்த குரல் பேசுவதுங் கேட்டது. நாங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு காதுகளை நிமிர்த்திக் கூர்மையாக கவனித்தோம். வீட்டுக்காரர் கள்வர்தான் அடுக்களையினுள் இருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டார்களென்பது அவர்கள் பேச்சிலிருந்து விளங்கியது. ஒருவர் பொலீசுக்கு டெல்லிவோன் பண்ணுவோமென்றர். இன்னெருவர் துப்பாக்கியை யெடு என்றர். இன்னெருவர், "கள்ளனெடா" என்று சத்தமிட்டுவிட்டார். உடனே அயலவர்கள் யாவரும் கல்லுப் பொல்லுகளுடன் வந்து சேர்ந்தனர். வீட்டைச் சுற்றிப் பெரிய ஆரவாரம். பலத்த அமளி.

காச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோல் நின்மலமாய்ப், பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

# கல்வி 34

( தமிழாசிரியர் திரு. கா. இளையதம்பி அவர்கள் )

மனிதவாழ்க்கைக் கனுகூலமானவும் பிரதிகூலமான வுமான பூச்சிவகைகளை யிவ்விதழி லாராய்வாம். சிமை யத்திப்பழத்துக் கனுகூலமான குளவியினத்தை முன் னொருபோது விதந்து கூறினம்.

விவசாயிகளுக்கனுகூல மானவற்றை யாராய்வாம். அமரிக்காவிலே றொக்கிமலையிலே வருடந்தோறும் நொவம் பர் மாதத்திலே யொருவகைப் பூச்சியின் குஞ்சுப் புழுக் களைச்சேகரிக்கிறார்கள். அவற்றை நகரங்களுக்குக்கொண்டு போய் அவற்றிற்கென்று ஆயத்தப்படுத்தப்பட்ட சீத ளம் மிகுத்த வறைகளில் அவற்றை, வைத்துக் காப் பாற்றி அடுத்த எப்பிரில் அல்லது மே மாதத்தில் அவை பெரும் பூச்சிகளாக மாறியவுடன் அவற்றைக் கமக்கார ருக்கு விற்கிறார்கள். கோதுமை நெல் முதலியதானி யங்களைத் தின்றழித்து விடும் ஒருவகைப் பசிய ஈக் களை இவை தீவிரமாய்த் தின்றழித்துவிடும்படி கமக் காரர் இவற்றை உபயோகிக்கின்றனர். இவற்றால் வரு ஷத்தில் ஒருகோடி டலர் அமரிக்கருக்கு மிச்சமாகின்ற தாம். இவ் வீக்களை நாசமாக்குவன "லேடி பறவை" வண்டுகளெனப் பெயரிட்டனர்.

வண்டுகளுங் கறையான்களும் மற்றொருவகையிற் கமத்தொழிலாளருக்குப் பயன்படுகின்றன. கறையான் வீடுகளிற் புகுந்து அங்குள்ள, தளபாடங்களை நாசமாக்கு வது யாவர்க்குந் தெரிந்ததொன்றே. எனினும், அவை அழுக்கும், புலாலும், குப்பையும் பதனழிந்த பொருள் களும், உக்கியவல்லதுழுத்த பொருள் முதலானவற்றை யுமே தேடி யரித்துவிட்டால் அவை நம் வாழ்க்கைக் கனுகூலமற்றனவெனச் சொல்லப்போமோ?, மண்ணுணிப் பூச்சிகளைப் போலவே யிவையும் மண்ணை மேலுங் கிழு மாக்கித் தரையிற் காற்றாட்டத்தை யுண்டுபண்ணு கின்றனவே. கறையான் புற்று இருபது முப்பது அடிக்கு வளர்ந்து கல்லுப்போல் வலிந்து நெட்டிருப்புப் பாரைக் கும் நெக்குவிடாத் தன்மையனவாயிருத்தலை நாம் பார்த் திருக்கின்றோமே. இப்புற்றுக்களின் சுவர்கள் கறையானின் உமிழ் நீராற்பிசைந்து கட்டப்பட்டனவென்க. எங்குத் தரை பண்படுத்தப்படாது வறிதில் விடப்பட்டிருக்கிறதோ, எந்த வீடு அசுத்தம் நிறைந்த நிலையிற் பெருக்கப்படாது விடப்பட்டிருக்கின்றதோ அங்குத்தான் கறையானின் அடாத்தான செயல்களுண்டென்க. அவை மண்ணுக் குள் காற்றாட்டத்தையும், ஈரலிப்பையும் வருவித்துப் பசளைவகைகளை மட்கிப்போகச் செய்கின்றனவெனத் துணிக. கறையானிலே 890 வகையுண்டென்றும், அவற் றின் தேகத்திலே சுரக்கும் எண்ணெய்போன்ற வெயர் வையைத் தாமே மாறி நக்கியுண்டு சீவிக்கின்றனவென் றும், மூன்றினமே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின் றனவென்றும் ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். வண் டுகள் நிலத்தை யுழுது அங்குக்காணப்படும் பயிர்வகை களை நாசமாக்கும் பூச்சிகளையும் புழுக்களையுந் தின்று கமக்காரனுக்கு நன்மை செய்கின்றன.

இனிப் பிரதிகூலமானவற்றைக் கவனிப்பாம். பயிர் வகைகளைத் தின்று நஷ்டம் விளைக்கும் பூச்சிகள் பூமுக மெங்கனுமுண்டு. மாணாக்கரும், பெற்றோரும், மற்றை யோரும் இராமபாணம் என்னும் பூச்சியின் கொடுமை யிவ்வகைத் தென்றறிந்திருக்கிறார்களே. இதற்குக் கண் ணில்லை. சிறகில்லை. ஆனாலும், முகத்திலிரண்டு மீசை மயிர்களுண்டு. இவைதாம் அப்பூச்சியின் பஞ்ச புலன் களுக்கு மிருப்பிடமானவை. மாவகைகளிலும், சர்க்க ரைப் பதார்த்தங்களிலும் வந்து குந்தும் கரப்பாண் பூச்சியுமொன்று. அது வந்திருந்தமட்டிலே யப்பொருள்க ளிறைக்கப்பட்டுப் புழுக்கைகளால் அசுத்தமாக்கப்பட்டுப் போவதை நோக்குமிடத்தில், அதனால் வருங்கேடு அதிக மென்க. இருட்டான சாக்கடைகளிலும், சுவர்ப்பிளவு களிலும் பூச்சி வசித்தலை நோக்குமிடத்து வெளிச் சத்தி னின்றியமையாமை பெரிதும் வேண்டப்படும். அடுத்த விதழில் மற்றைய பூச்சிகளைக் கவனிப்பாம்.

---

இதைக் காண எங்களுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. நாங்கள் கூரையின்மீது உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தோம்; 'சுண்டெ லிக்கு விளையாட்டு செல்லப்பிள்ளைக்கு சீவன் போகிற' வருத்தம்; என்று பழமொழியையும் மாற்றியமைத்துக்கொண்டோம்.

சிலர் துணிவாக அறையைத் திறந்து பார்த் தார்கள். அங்கு ஒருவரையுங் காணவில்லை. சாடியொன்று மாத்திரமுடைந்து கிடப்பதைக் கண்டார்கள். மற்றைய பொருட்கள் யாவும் வைத்த வைத்த இடங்களிலேயே கிடந்தன. ஆகவே கள்வர் வரவில்லையென்றும், எலியோ பூனையோ தான் சாடியை வீழ்த்தியிருக்க வேண் டுமென்றும் முடிவு செய்துகொண்டு திரும்பி னார்கள். சனங்களும் தத்தம் வீடு சென்றனர்.

(தொடரும்)

---

**ஈழகேசரி கல்வி அனுபந்தம்**

தனிப்பிரதி விலை சதம்—3

25 பிரதிகள் விலை சதம்—50

தபாற் செலவு வேறு

ஆண்டுச்சந்தா ரூபா 2.

முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

---

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதான், அற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே.

# ஆசைக்கோரளவில்லை

[வ. இராசரத்தினம், கல்முனை]

நீரிற் குளிர்ச்சியும், நெருப்பிலனலும், பதியுடன் பாசமும் இயல்பிலேயே ஒன்று சேர்ந்து பிரிபடக்கூடாத நிலைமையிலிருக்கும் தன்மைபோல, ஆசையும் உயிர்கள் மாட்டு என்றென்றும் பிரியா நிலைமையிலுள்ளது. ஆசை யாரைத்தான் விட்டிருக்கிறது! ஓர் உயிர் இன்னொருயிரை விரும்புகின்றது; விரும்பியதைப் பெற முயல்கின்றது. அது கைகூடாதாயின் வலிந்துபெற ஏற்பாடு செய்கிறது. இதற்கிடையில் அடையும் இன்னல்களோ மிகப்பல. இங்ஙனம் இருதிணை உயிர்களும் தத்தமிற் கொள்ளுமாசையோ அளப்பில.

முற்றத் துறந்த முனிபுங்கவரையும் ஆசை எனுங் கொடிய பேயானது விட்டிடவில்லை. இறைவன்றன் திருவடி நீழலை அடைய—பேரின்பத்தை நுகரக்—கொள்ளும் ஆசை என்றும், இலௌகீக விஷயங்களிலீடுபட்டுச் சிற்றின்பத்தை நுகரக்கொள்ளும் ஆசையென்றும் இரண்டு விதமாக ஆசையைப் பாகுபாடு செய்யலாம். இவற்றில் முந்திய ஆசையே சாலவுஞ் சிறந்ததென்க.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவனடி சேரா தார்"

அருளாளி அண்ணலின் திருவடி நிழலைச் சேருதலில் எவ்வளவும் ஆசைகொள்ளலாம். அதனால் நாம் பிறவிப் பயனை அடைதல் கூடும். ஆனால், மற்றவழியிற் கொள்ளும் ஆசையானது பிறவிப் பிணியிற்கொண்டு செலுத்துமே தவிர, ஈடேற்றத்தைக் கொடுக்கமாட்டாது. மின்னலெனத் தோன்றிமறையு மற்ப வாழ்க்கையிற் பற்றுமாசை தீமையையேயன்றி அணுவளவேனும் நன்மையை நல்கா. வேடுவர் குலத்துதித்த திண்ணனெனுங் கண்ணப்ப நாயனார் இறைமேற்கொண்ட அளவுகடந்த ஆசையாலன்றோ ஆறுநாளிற் சிவபதமடைந்தார்; பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சமய குரவர்கள் முதலாகவுள்ள நாயன்மாரனைவரும் மோட்ச சாம்பிராச்சியத்தை அடைந்தனர். இன்னும் எத்தனையோ உயிர்கள் இவ்வாறு அந்திவண்ணன் மேற்கொண்ட ஆசையால் அவன் பதம் அடைந்து இணையிலா இன்பத்தை நுகர்ந்தன. இறவா இன்பம் பயக்கவல்லது இதுவேயாம்.

இனி, இதன் மறுதலையான—சிற்றின்ப சாகரத் தோடுகூடிய—ஆசை எவ்வளவிற்றெனச் சிறிதாராய்வாம். மண் பெண் பொன் என்னும் மூவித ஆசைகளும் சிற்றின்ப வாழ்க்கைக்கு அடிப்படையானவையே. இவ்வாசைகளொவ்வொன்றினையுஞ் சுவைத்துப் பார்க்கும்போதுண்டாகும் அற்ப இன்பம், அதன் முடிவிலுண்டாந் துன்பத்திலும் எவ்வளவோ நுண்ணிதாகும். "ஆசைக்கோரளவில்லை யகில மெல்லாங் கட்டியாளினும்........" என்றும், "பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்—" என்றும், தாயுமான சுவாமிகள் உலக ஆசையை வெறுத்து நீக்கி இருத்தல் காண்க.

கௌதமரின் பத்தினியாய அகலிகையைப் புணர்ந்து இந்திரன் சாபம் பெற்றதும்; பாண்டவரின் பத்தினியாம் திரௌபதியை இச்சித்து வீமனால், கீசகன் மாண்டதும்; அற்ப காதலுக்காக அளவிறந்த ஆசை கொண்டு இராவணன் சீதையைக் கவர்ந்து இராமனால், உற்றாருறவினருடன் பரலோகமடைந்ததும் பெண் பேயின் மேற் பெருமாசை கொண்டல்லவா? ஆயிரத்தெட்டண்டங்களையும் நூற்றெட்டுச் சதுர்யுகத்துக்காண்ட சூரபத்மன் மண்ணாசை கொண்டல்லவா மாண்டொழிந்தான்? மூவித ஆசைகளாலும் மண்ணின்மேல் மாண்டொழிந்தோர் மண்ணிலுமதிகமாவர். இவ்வாசைகளுக்கு மனம், கண், காது ஆகிய மூன்றுமே குரு மூர்த்திகளாக இருக்கின்றன. இவையிற்றின் கொடுமையைச் சகிக்கலாற்றாத தவசிரேட்டர்கள் கானகமேகிப் பஞ்சபொறிகளையும் ஒருவழிப்படுத்தி இறைவன் திருவடியை அன்பெனுமாசை கயிற்றினாலிணைக்க வழி தேடா நின்றனர். எனவே, யாவரும் தாமரையிலை நீர்போல் உலக வாழ்க்கையினின்று இறைவன் பதம்பெற ஆசையைப் பெருக்குவோமாக.

# 'நுளம்பின் சரிதை'

நான் "என் தாயாரின் வயிற்றிலிருந்து சிறு குட்டையொன்றில் முட்டையாக வெளிவந்துள்ளேன். என்னுடன் இன்னும் தொகையானவர்கள் வந்து உற்பவித்தார்கள். பின்பு கண்ணுக்குத் தெரியாத சிறு புழுவானேன். என்னுடன் கூடியவர்களும் என்போன்ற உருவத்தையடைந்தார்கள். இவ்வளவையும் என் தாயார் கூறக்கேட்டதேயல்லாமல் நான் நேரில் கண்டவைகளல்ல. பின்பு நான் குட்டையில் வாழ்ந்துவருங் காலத்தில் ஒரு பெரு வெள்ளம் போட்டதின் நிமித்தம் என் தாயாரும் மற்றையவர்களில் சிலரும் அழிந்து போயினர். எனக்கு இந்த ஊரவர்கள் "அநோவலஸ்" என்னும் பெயரையும் கொடுத்துவிட்டார்கள்.

அக்குட்டையில் நீர் வற்றிப்போக நான் அதிலிருந்து வெளிக்கிளம்பி ஒரு மரச் சோலையில் என் கூட்டாளிகள் சிலரோடு வசித்து வந்தேன். மற்றவர்கள் எப்படியோ தெரியாது. நான் பகற்காலத்தில் வெளிக்கிளம்புவதில்லை. ஆனால் பொழுதுபட்டால் போதும். என் விளையாட்டை நீங்கள் கண்கொண்டு பார்க்கமாட்டீர்கள். நானும் ஒரு கள்வனும் சரி. ஏனென்றால் கள்வரும் இராக்காலத்திற்றான் பிறர் பொருளையும் உயிரையும் பறிமுதலாக்குகின்றனர். நானும் அப்படியே இரவிற்றான் சஞ்சாரம்பண்ணி பிற உயிர்களை வருத்துவேன். ஆகவே முற்

உருவெளிதான் வாதவூர். உத்தமர்க்கல்லாலினமுங், குருவழிநின் றூர்க்குமுண்டோ கூறாய் பராபரமே.

கூறிய ஒப்பு உண்மையே. நான் பகலில் ஏன் உலாவுவதில்லைத் தெரியுமா? யான் பிறக்கும் பொழுது சூரியபகவான். "நீ என் கண்முன்னே நிற்பாயேல் நாசமாக்கிவிடுவேன்" எனக் கூறிய தனால், இரவில் சஞ்சரிக்கிறேன்.

இதற்கிடையில் எனக்குப் பல வேலைகள் வருவதுண்டு. இப்படியாக நான் இருந்த இடத்தைவிட்டு வேறு ஒரு இடத்திற்கு உணவு தேடும்படி சென்றேன். அவ்வாருகப் போய்த் திரும்பி வருவதற்கிடையில் சூரியன் துரத்திக்கொண்டு வந்துவிட்டான். என் செய்வது. கெட்டகாலம். பக்கத்திலிருந்த வீடொன்றில் மறைவாக உட்கார்ந்துவிட்டான். இதற்கிடையில் இருந்தாற்போல் சங்கீதக் கோஷ்டி வைப்பது முண்டு. எனக்குப் பசியோ தாங்கமுடியவில்லை. அவ்வீட்டில் "கமலா" என்ற ஒரு அழகிய பெண் இருந்தாள். அவளைப்பற்றிப் பலர் பலவிதமாகக் கதைத்த கதைகளை நேரில் கண்டாலும் நானும் ஒரு முறையாயினும் அவளுடன் பேச வேண்டுமென நினைத்தேன். கமலாவை நினைத்ததும் பசிமாறிவிட்டது. பின்பு அவள் வெளியில் வருவாளோ என நினைத்துக்கொண்டு கதவில் உட்கார்ந்தேன். கமலா வந்தாள். உடனே சிரிப்பு அடக்கமுடியவில்லை. கமலாவின் கன்னத்தில் உட்கார்ந்தேன். உட்கார்ந்ததும் "தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடுமட்டுமல்லவா" என்றதுபோன்று நான் அவள் கன்னத்தில் உட்கார்ந்தவுடன் குத்திவிட்டேன். அவள் போ "நாயே எளியது" என வாய்க்கு வந்தபடி பேசிவிட்டுச் சடுதியாய் அடித்தாள். அடிபடாமல் தப்பி வந்துவிட்டேன். பின்பு அவ்வீட்டிற்ருன் "பொன்னியம்மாள்" என்ற வேருெரு பெண் வசித்தவள். அவளோ சிரங்கென்பது மருந்துக்கேனும் இல்லாதவள். அவளில் உட்கார்ந்தால் ஏன் பேசுவான். கமலா என்று தான் நினைததேன் போலும். கண் மின்னுகிற தென்று சொல்லும்படி அடி ஒன்று பட்டது தான் தெரியும்.

[பின் நுளம்பு அடித்த அடியுடன் இறந்தது]

போ. கிருஷ்ணனந்தம், J. S. C. மாணவன்
மட்டுவில் வடக்கு, சந்திரமௌளீச வித்தியாசாலை.

# முயற்சி

முயற்சி, வினை, தொழில் இவை எல்லாம் ஒரு பொருட்சொற்களே. இது சரீர முயற்சி, மனமுயற்சி என இருவகைப்படும். இவற்றுள் மனமுயற்சியே மிகச் சிறந்ததாகும். சரீர முயற்சிக்கும், மனமுயற்சியின் துணை அவசியமாகும். மன முயற்சிக்கு சரீர முயற்சியின் துணை அவசியமில்லை. தினந்தோறும் புதிய புதிய தோற்றங்களையும், சுகதுக்கங்களையும், கொடுத்து நிற்பதும், மானிடர்களில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், கற்றவர்கள், கல்லாதவர்கள், பலசாலிகள், பலவீனர்கள் ஆகிய எல்லாருக்கும் உரியதாகி அவரவர்களை உயர்த்துவதும் இதுவே.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

"முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்பது பழமொழி அன்றே. நம்நாட்டு வாலிபர்கட்கு இன்னும் உணர்வு வரவில்லை. அது இருக்குமாயின் இத்தகைய நிலைமை ஏற்படாது. நம்நாட்டார் முயற்சியைக் கையாளவில்லை. கையாண்டிருந்தால்; நம்நாட்டின் முக்காற்பங்கு காடாயிருக்காது. காடாயிருக்கும் பாகங்களில் வேளாண்மை செய்தாலென்ன?

நாம் முயற்சி செய்யப்புகின் அதற்குத்தக்க காலத்தை அறிந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பலன் அடையலாம். விடாமுயற்சியுடையாருக்கு எதுவும் கைகூடும்.

"தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்"

இம்முயற்சியானது அண்டத்திலுள்ளாருக்கு இன்றியமையாதது. இதுவே சகல காரியங்களையும் நடத்துவது. மார்க்கண்டேயர் தம் முயற்சி வலிமையாலல்லவா விதியையும் வென்று என்றும் இறவாத் பதவி பெற்ருர். இத்தகைய முயற்சியென்னும் செழும்பயிரிற்குக் களையாகத் தோன்றுவது சோம்பலாம். நீங்கள் உண்மையாக முயற்சித்தால் அதற்குத் தக்க இலாபமடைவீர்கள் இது திண்ணம்! திண்ணம்!!

மூ. மாதர்சாஹிப், 7-ம் வகுப்பு,
விஜயகல்லூரி, மாத்தளை.


**திருமாவளவன்**

1939-ம் ஆண்டு கனிஷ்டபாடசாலைத் தராதரபத்திர வகுப்புக்கு இலக்கிய பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

விலை சதம் 50

தனலக்ஷுமி புத்தகசாலை, சுன்னுகம்

வெளிவந்துவிட்டது!

வெளிவந்துவிட்டது!!

**விசாகப்பெருமாளையரவர்கள், இயற்றிய**

**யாப்பிலக்கணம்**

(திருத்தமான பதிப்பு)

**விலை சதம் 35.**

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

அன்பார்ந்த பேரப்பிள்ளைகாள்!

அப்பாடா, இவ்வளவு கதைகளில் நான் எதைத் தான் திறமையுள்ள தென்று தேர்ந்தெடுப்பேன்? ஒன்றைவிட ஒன்று விசேஷமான கதை. நூற்றுக்கணக்கில் வந்து குவிந்து கிடக்கும் சிறுகதைகளுக்குள் ஒன்றுக்காவது பரிசு கொடுத்து உற்சாக மளிக்கா விட்டால் பேரன் பேத்திகள் கோபித்துக் கொள்வார்கள் என்று நினைத்தே ஒரு கதையைப் பொறுக்கி எடுத்து அதற்கு ஒரு பரிசு அனுப்பப்பட்டிருக்கிறது.

'சிறுகதைகளைத் தெரிந்து பார்ப்பதே மிகுந்த சிரமத்தைக் கொடுத்தது. சில குழந்தைகள் சிறுகதை என்ன மாதிரி இருக்க வேண்டுமென்று தெரியாது மனதில் வந்ததை யெல்லாம் எழுதிவிட்டனர். வேறு சிலர் தங்கள் சொந்தமல்லாத — வேறு உதவியைக்கொண்ட கதைகளை எழுதியனுப்பினார்கள். கூடியளவு கதைகள், கட்டுரைகள் தங்கள் சொந்தமாயிருந்தால் தான் பரிசு பெறும் உரிமை யுண்டென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்த மாதம் 4-ந் திகதிக்கு இன்னுமொரு சிறுகதைப்போட்டி இருக்கிறது. ஆனால் இம்முறை பேரன் பேத்திகளின் விருப்பத்திற்கிணங்க இரண்டு பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன. மிகவும் திறமையான கதைக்கு முதற்பரிசும் அதற்கு அடுத்த படியிலுள்ளதற்கு இரண்டாம் பரிசும் கொடுபடும்.

## நிபந்தனைகள்

1. 'ஈழகேசரி' இளைஞர் சங்கத்திலுள்ளவர்களே இப்போட்டியிற் கலந்து கொள்ளலாம்.
2. சிறு கதைகள் ஒவ்வொன்றும் 'புல்ஸ்காப்' கடதாசியில் மூன்று பக்கத்துக்கு மேற்படலாகாது.
3. கடதாசியின் ஒருபுறத்தில் மாத்திரம் எழுதப்படவேண்டும்.
4. கதைகள் சொந்தக்கற்பனையாக இருக்கவேண்டும்.
5. நவம்பர் மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்கு முன் கதைகள் 'ஈழகேசரி'க் காரியாலயத்தைச் சேரவேண்டும்.
6. கதைகள் அனுப்பும் கவர் மீது இடது புற மூலையில் "சிறுவர் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட்டு அதன் கீழ் அங்கத்தவர் சந்தா எண்ணையும் குறிப்பிட வேண்டும்.
7. 'தாத்தா'வின் தீர்ப்பே முடிவானது. எதிர் வாத்துக்கிடையாது! 'ஈழகேசரி' டிசேம்பர் 4-ம் திகதி கல்வி அனுபந்தத்தில் பரிசு பெற்றவர் பெயரும் கதையும் வெளியிடப்படும். பரிசும் அன்றே அனுப்பப்படும்.

—தாத்தா.

132. அ. ஜயேந்திரன்: (கொள்ளுப்பிட்டி) — உமது சந்தா எண் 132. 'ஆனந்த விகடனை'ப் படிக்கலாம், ஆனால் பிற பத்திரிகைகளிலுள்ளதைச் சொந்தமாக்கிக் கொள்ளலாகாது!

131. அ. இந்திரவதி (கொள்ளுப்பிட்டி) கதை நன்றாயிருந்தது. ஆனால் போட்டியில் பரிசு பெறத்தவறி விட்டது. அடுத்த போட்டியில் உமது கை வல்லமையைப் பார்க்கலாம்.

செ. முருகானந்தன் (தெல்லிப்பழை)—உமது சந்தா எண் 125. வசன நடையில் 'ஆனது', 'ஆனவன்' என்ற முடிபுகள் எண்ணிக்கையற்று நுழைந்து விட்டன. கூடியளவு குறைத்துக் கொள்ள வேண்டும்.

## விண்ணப்பப் பத்திரம்

திகதி..............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறு மாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்..............................

பிறந்த திகதி.........மாதம்...............வருடம்............

விலாசம்..............................

..............................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர்

கையொப்பம்..............................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.


## கல்வி அனுபந்தம்

(சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன.)

சென்றவருட 'ஈழகேசரி கல்வி அனுபந்த'ப் பிரதிகள் முழுவதும் சேர்த்துப் புத்தக ரூபமாக கட்டப்பெற்றிருக்கின்றது.

விலை ரூபா 2-00
தபாற்செலவு ·35

'ஈழகேசரி' நிலையம், சுன்னாகம்


யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி' யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ௵ நவம்பர் ௴ 27௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது